X-FP2. **முழு பாடத்திட்டத் தேர்வு**

**வகுப்பு:10** **தமிழ்.** **மதிப்பெண்கள்:100**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:.** **14×1=14**

1. "நற்கணக்கே" என்பதில் சுட்டப்படும் நூல்கள் எத்தனை?
அ) 18 ஆ) 10 இ) 8 ஈ) 5

2.'நாடும் மொழியும் நமதிரு கண்கள்' என்று பாடியவர் யார்?
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன். இ) பெருஞ்சித்திரனார் ஈ) பாவாணர்

3.மெய்க்கீர்த்திக்கு முன்னோடியாய்த் திகழும் சங்க இலக்கியப்பாடல்கள்...........................
அ) புறநானூறு ஆ) பதிற்றுப்பத்து இ) குறுந்தொகை ஈ) அகநானூறு

4.வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி?
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

5.திருமுழுக்கு யோவானுக்கு வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இட்ட பெயர்.............................
அ) கருணாகரன் ஆ) கருணையன் இ) கருணாமூர்த்தி ஈ) வலின்

6.முடக்கத்தான் (முடக்கொற்றான்) என்பது .........................
அ) உழிஞைப் பூ ஆ) தும்பைப் பூ இ) வெட்சிப் பூ ஈ) நொச்சிப் பூ

7.பொருத்திக் காட்டுக.
i) நான், யான், நாம், யாம் - 1. தன்மை வினைகள்
வந்தேன், வந்தோம் - 2. தன்மைப் பெயர்கள்
iii) நீ, நீர், நீவிர், நீங்க ள் - 3. முன்னிலை வினைகள்
iv) நடந்தாய், வந்தீர், சென்றீர்கள் - 4. முன்னிலைப் பெயர்கள்
அ) 2, 1, 4, 3 ஆ) 4, 3, 2, 1 இ) 2, 4, 3,1 ஈ) 3, 4, 2, 1

8.காலக் கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் .........
அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது.
ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது.
இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என் மனம்.
ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்

9.கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால்
ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால்
ஈ) அங்கு வறுமை இல்லாததால்

10.எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்
இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

11.'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?
அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளி:**

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன் பால்
மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்
மீளாத் துயர் தரினும் வித்துவக் கோட்டம்மா

ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே நீ

12. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்

அ) நீதி வெண்பா ஆ)பெரியபுராணம்

இ)கம்பராமாயணம் ஈ)பெருமாள் திருமொழி

13. இப்பாடலின் ஆசிரியர்___

அ) குலசேகர ஆழ்வார் ஆ) கம்பர். இ) சேக்கிழார். ஈ) செய்து தம்பி பாவலர்

14. மீளாத் துயர் இலக்கண குறிப்பு தருக

அ) பெயரெச்சம். ஆ) வினையெச்சம்.

இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஈ) வினைத்தொகை

15.மாயம்' என்பதன் பொருள்

அ) பொய்மை ஆ) நிலையாமை இ) விளையாட்டு ஈ) அற்புதம்

பகுதி 2( பிரிவு 1)

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி:. 4×2=8**

**(21-**ஆவது வினாவிற்கு கண்டிப்பாக விடை அளிக்க வேண்டும்)

**17.**காய்மணி யாகு முன்னர்க்

காய்ந்தெனக் காய்ந்தேன் -உவமை உணர்த்தும் கருத்து யாது?

18.ஜெயகாந்தன் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப்பெரிய சவால் எது?

19."அன்னை மொழியே" என்ற பாடலில் அமைந்துள்ள விளிச்சொற்களை எழுதுக.

20.சரயு ஆறு எவ்விடங்களிலெல்லாம் பரவிப் பாய்ந்ததாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்?

21. தரும் என முடியும் குறட்பாவை எழுதுக.

பிரிவு 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:. 5×2=10**

**22**.கலைச்சொல் தருக அ): Intellectual ஆ)symbolism

23.பொருள்கோள் எத்தனை வகைப்படும். அவை யாவை?

24.கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, கோறல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.

25.மலர் உண்டு; பெயரும் உண்டு - இரண்டு தொடர்களையும் ஒரு தொடராக்குக.

26.தொடர் சொற்றொடராக மாற்றுக

இன்னாசியார் புத்தகங்களை வரிசைப்படுத்தினார். அவற்றைப் புத்தக அடுக்கங்களில் அடுக்கி வைத்தார். புத்தகங்களைக் கேட்டவர்களுக்கு எடுத்துக் கொடுத்தார்.

27.மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

அ)மனக்கோட்டை: ஆ)கண்ணும் கருத்தும்:

28.மயங்கிய - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி 3 ( பிரிவு 1)

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி: 2×3=6**

**(**வினா எண் 31 கட்டாய வினா**)**

**29** 'பால்வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு

கூலம் குவித்த கூல வீதியும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

30.செய்குதம்பிப் பாவலர் ஏன் சதாவதானி என்று போற்றப்படுகிறார்?

31. நவமணி எனத் தொடங்கும் தேம்பாவணி பாடல்

(அல்லது)

மாற்றம் எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடல்

பிரிவு 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:.** **2×3=6**

32.'தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்' - இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

33.தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களையும் அதற்குரிய தாவரங்களின் பெயர்களையும் எழுது.

34.ஜெயகாந்தன் தம் கதை மாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். - இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் "தர்க்கத்திற்கு அப்பால்" கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

பிரிவு 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி:.** **2×3=6**

35.தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

36.முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.- அலகிட்டு வாய்பாடு தருக.

37. தீவக அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

பண்என்னாம் பாடற்கியை பின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக

பகுதி 4

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி:.** **5×5=25**

**38அ).**கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரி.

(அல்லது)

ஆ)கம்பரின் கவிக்காட்சிகளை (வருணனைத் திறம்) விளக்குக.

39.அ)நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் 'உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்' என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக. (அல்லது)

ஆ)உம் பள்ளியில் நடைபெறும் நாட்டு நலப்பணித்திட்ட முகாமின் தொடக்கவிழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்குக.

40.விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.




41.விண்ணப்பப் படிவத்தை நிரப்புக

(சென்னை மாவட்டம் வேளச்சேரியில் வசிக்கும் முருகேசன் என்பவரது மகன் அருண்குமார் பதினோராம் வகுப்பில் உயிரியல் பிரிவில் சேர விரும்புகிறார் அவருக்கு விண்ணப்பப்படிவத்தை நிரப்புக)

42.காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



______________________
______________________
______________________
______________________
______________________
______________________
______________________

பகுதி 5

. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி:.** **3×8=24**

**43.**அ)அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதைமாந்தர் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ)அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

44.அ)தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ)ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

45.அ)உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வைக் கட்டுரையாக்குக. (அல்லது)

ஆ)விண்வெளியும் கல்பனா சாவ்லாவும் –என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக

@@@d@a@n@i@@@

ஆக்கம்:
சௌ.டென்சன் டேனியல்
தமிழாசிரியர்,
ஏ ஆர் சி பதின்ம மேல்நிலைப்பள்ளி,
கருமத்தபட்டி,
கோவை-641659
9790704840

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :

2. பிறந்த நாள் :

3. தேசிய இனம் :

4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :

5. வீட்டு முகவரி :

6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :

7. பயின்ற மொழி :

8. பெற்ற மதிப்பெண்கள் :

9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :

11. தாய்மொழி :

12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து